RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

தொல்காப்பிய பொருளதிகாரத்தில் அறக்கூறுகள்

கு. சிவகாமி [அ] *

[அ] தமிழ்த்துறை, கொ.கந்தசாமி நாயுடு ஆடவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை-600102, இந்தியா

Ethical Thought and Literary Conventions in the Porulathikaram

G. Sivagami [a, *]

[a] Department of Tamil, C. Kandaswami Naidu College for Men, Chennai, Tamil Nadu, India

*Corresponding Author:
sivimohan1111@gmail.com

ABSTRACT

Tolkappiyam, the earliest extant Tamil grammatical treatise, is organized into three major divisions: Ezhuthathikaram (phonology and orthography), Sollathikaram (words and grammar), and Porulathikaram (subject matter and literary conventions). Comprising nine sections, the Porulathikaram establishes the principles governing literary composition and explains the relationship between human experience, social life, and poetic expression. In the Tamil philosophical tradition, the four fundamental objectives of human life are identified as virtue (aram), wealth (porul), pleasure (inbam), and liberation (veedu). Since liberation transcends the limits of linguistic expression, classical literary discourse primarily addresses the other three objectives. Notably, Tolkappiyam places inbam, porul, and aram in a distinctive order, reflecting its emphasis on human experience and the literary representation of love and social life. This study examines the ethical principles embedded in the literary framework of the Porulathikaram, focusing on how virtue is expressed through the conventions and responsibilities associated with akam and puram traditions. Particular attention is given to the duties of akam characters, the different stages and circumstances of araththodu nirral (standing by virtue or ethical propriety), and the ethical dimensions of domestic life. The study analyses how moral values are integrated into literary situations, interpersonal relationships, and prescribed social responsibilities. It also explores the relationship between individual conduct, emotional experience, and social expectations as represented through the literary principles of Tolkappiyam. The study argues that Porulathikaram does not treat virtue merely as an abstract moral concept; rather, it integrates ethical principles into the representation of human relationships, love, family life, and social conduct. Thus, the ethical dimensions of Tolkappiyam reveal how literary conventions function as vehicles for expressing moral values and regulating human relationships within the broader framework of classical Tamil thought.

Keywords: Tolkappiyam, love and social life, Porulathikaram, Human relationships

முன்னுரை

தொல்காப்பிய பொருளதிகாரத்தில் "அறக்கூறுகள்" (அறநெறி விழுமியங்கள் - Ethics) மனித வாழ்க்கையின் அடிப்படையாக முன்வைக்கப்பட்டுள்ளன. "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு" என வாழ்வின் ஒழுக்க நெறிகளைத் தொல்காப்பியர் வரையறுக்கிறார். உலக மொழிகளில் எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமே இலக்கணம் வகுக்கப்பட்ட நிலையில், மனிதன் அறத்தோடு வாழ்வதற்கே பொருளதிகாரம் வகுக்கப்பட்டுள்ளது.

சங்க இலக்கிய அக மாந்தர்களின் கடமைகளை விளக்கும் தொல்காப்பிய நூற்பாக்களையும், அவற்றுக்கு சான்றாக விளங்கும் சங்க இலக்கியப் பாடல்களையும் கீழே காண்போம்.

தலைவனின் கடமைகள் (பொருள் ஈட்டுதல் & ஆற்றியிருக்கச் சொல்லுதல்)

தொல்காப்பியம் தலைவன் பொருள் தேடிப் பிரிவதையும், அது அவனது முதன்மைக் கடமை என்பதையும் தெளிவாகக் கூறுகிறது.

"மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே" (தொல். பொருள். 31)

கல்வி, பகை, தூது, பொருள் நிமித்தம் பிரிதல் ஆகிய கடமைகள் தலைவனுக்குரியன.

தலைவன் பொருள் தேடச் செல்ல நினைக்கும் போது, தன் நெஞ்சிற்குக் கூறுவதாக அமைந்த பாடல்:

"வினையே ஆடவர்க்குயிரே வாணுதல்

மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்" (நற்.126)

ஆடவர்க்கு (ஆண்களுக்கு) செய்கின்ற தொழிலே உயிர் போன்றது; வீட்டில் வாழும் பெண்களுக்கு அந்த ஆடவரே உயிர் போன்றவர். எனவே, பொருள் ஈட்டப் பிரிவது தலைவன் கடமை என்கிறது இப்பதிவு.

தலைவியின் கடமைகள்

திருமணத்திற்குப் பின் இல்லறத்தை நன்முறையில் நடத்துவதும், விருந்தினரை உபசரிப்பதும் தலைவியின் முக்கியக் கடமைகள் ஆகும்.

"கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்

மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்

விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்

பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்" (தொல். பொருள். கற்பி.11)

தலைவியின் விருந்தோம்பும் பண்பைப் பாராட்டி நற்றாய் பாடுவது:

"முந்நீர் நாப்பண் திமில்சுடர் போலச்

செம்மீன் இமைக்கும் மாகடல் மடுத்த

வான்மீன் இமைக்கும் இரவுவந் தன்றே...

வண்டல் ஆயமோடு ஆய்கிழங்கு அகழா...

விருந்தினர்க்கு அரியவள் அல்லள்" (நற்.120)

தன் வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு இன்முகத்தோடு உணவளித்து உபசரிப்பது தலைவியின் முதன்மைக் கடமையாக இருந்தது.

தோழியின் கடமைகள் (அறத்தொடு நிற்றல் & வரைவு கடாதல்)

தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே உள்ள காதலைப் பெற்றோருக்குத் தெரிவித்து, திருமணத்தை உறுதி செய்வது தோழியின் கடமை.

"எளிய.... அறத்தொடு நிற்றல்" (தொல். பொருள். களவு. 24)

"மறைந்தவற் காண்டல் தற்கிழமை மேனிலை" (தோழி தலைவனைத் திருமணம் செய்ய வற்புறுத்துதல்) தலைவன் திருமணத்தைத் தள்ளிப் போடும்போது, தோழி அவனிடம் நேரிடையாக வற்புறுத்தும் பாடல்:

"யாரும் இல்லை தானே கள்வன்

தானது பொய்ப்பின் யான்எவன் செய்கோ?

தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால

ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்

குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே." (குறுந்.25)

"நீ தலைவியைத் மணம் முடித்தபோது அங்கே சாட்சிக்கு யாரும் இல்லை, அந்த நாரையைத் தவிர. எனவே, ஏமாற்றாமல் விரைவில் மணம் முடிக்க வேண்டும்" என்று தோழி தலைவனை வரைவு கடாதல் (திருமணத்திற்கு வற்புறுத்தல்) செய்கிறாள்.

செவிலித்தாயின் கடமை (இல்வாழ்வைக் கண்டு மகிழ்தல்)

மகள் தன் கணவன் வீட்டில் வறுமையுற்ற காலத்திலும், மனமுவந்து இல்லறம் நடத்துவதைக் கண்டு செவிலித்தாய் பெருமிதம் கொள்வாள்.

"தாய் அறிவுறு செவிலி மேன" (தொல். பொருள். செய்யுளியல்)

மகளின் நற்பண்புகளை நற்றாய்க்கும் பிறருக்கும் எடுத்துரைப்பது செவிலியின் கடமை.

செவிலித்தாய், தலைவியின் இல்லறப் பாங்கைக் கண்டு நற்றாயிடம் வியந்து கூறுவது:

"முளிதயிர் பிசைந்த சோறமை பிண்டம்

விரல்வகை விதிர்த்த வண்டல் ஈர்அகை

தொடிமாண் எவ்வம் கூர...

தன்அம் துடுப்பின் துழவுற்று ஆர்ந்த

புளிப்பாகு வெந்த சுவைஅறிந்து...

வரம்பில் இன்பம் அவற்கண் மாறே." (குறுந்.167)

தன் வீட்டில் செல்வச் செழிப்பில் வளர்ந்த மகள், கணவன் வீட்டில் தயிர் பிசைந்து, தாளிப்புப் புகையால் கண்கள் சிவந்தாலும், கணவன் அந்த உணவைப் பாராட்டி உண்ணும்போது அவள் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை எனச் செவிலி நெகிழ்கிறாள்.

அறத்தொடுநிலை - விளக்கம்

தொல்காப்பிய பொருளதிகாரத்தில் "அறத்தொடு நிற்றல்" என்பது அகப்பொருள் இலக்கணத்தின் மிக உன்னதமான ஒரு துறையாகும். இதன் எளிமையான பொருள் "அறத்தின் வழியே நின்று உண்மையை வெளிப்படுத்துதல்" என்பதாகும்.

தலைவனும் தலைவியும் பெற்றோருக்குத் தெரியாமல் மறைமுகமாகக் காதல் கொள்ளும் 'களவு' வாழ்க்கையை, சமுதாயம் ஏற்கும் 'கற்பு' (திருமணம்) வாழ்க்கையாக மாற்றுவதே இத்துறையின் முதன்மை நோக்கமாகும். காதல் ஒழுக்கம் என்பது தமிழர்களின் வாழ்வியல் அறம் என்பதால், அதனை எவ்விதத் தீங்கும் நேராமல் பக்குவமாக வெளிப்படுத்துவது "அறத்தொடு நிற்றல்" எனப்படுகிறது.

சங்க இலக்கியத்தில் களவை (மறைமுகக் காதலை)க் கற்பாக (திருமணமாக) மாற்றும் உன்னதத் துறையான "அறத்தொடு நிற்றல்" நிகழ்வதற்குப் பல காரணங்கள் மற்றும் நிலைகள் உண்டு. ஒவ்வொரு நிலைக்கும் உரிய மிகச் சிறந்த, அழகான சங்க இலக்கியப் பாடல்களும் காணப்படுகின்றன.

அறத்தொடு நிற்றல் நிகழும் நான்கு முக்கிய நிலைகள் (முறைகள்) மற்றும் அதன் ஏழு உத்திகள் கீழே தொகுக்கப்பட்டுள்ளன:

தலைவி தோழியிடம் அறத்தொடு நிற்றல்

வீட்டில் காவல் அதிகமாகும் போதோ அல்லது பெற்றோர் வேறு வரன் (வேற்று வரைவு) பார்க்கும் போதோ, தலைவி தன் மாறாத காதலைத் தோழியிடம் முதலில் வெளிப்படுத்துவாள்.

“அறத்தொடு நிற்குங் காலத் தன்றி

அறத்தியல் மரபிலள் தோழிஎன்ப”. (தொல்.பொருள்.203)

என்னும் நூற்பா முதலில் தலைவி, தோழிக்கு அறத்தொடு நிற்பாள் அங்ஙனம் அவள் நின்ற பின்பே தோழி அறத்தொடு நிற்பாள் என்ற வாழ்வியல் மரபினைச் சுட்டுகின்றது தலைவி அறத்தொடு நிற்கும் இம்மரபு அவளுடைய காதலின் உறுதியையும் பிரச்சனைக்குத் தீர்வுகாணும் அறிவுத்திறனையும் உணர்ந்தக் கூடியதாகும்.

“துர்மருங் கறியா அன்னைக்கு இந்நோய்

தணியுதமா நிதுவென உரைத்தல் ஒன்றோ

செய்யா யாதலிற் கொடியைத் தோழி

மணிகெழு நெடுவரை அணிபெற நிவந்த

செயலை அந்தளிர் அன்னஎன்

மதனின் மாமெயப் பசலையுங் கண்டே” (நற்.224)

இப்பாடலில் கண் தலைவி அறத்தொடு நிற்றமையை அறியலாம்.

மேலும்,

"நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;

நீரினும் ஆரள வின்றே - சாரல்

கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு

பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே." (குறுந்.3)

தலைவி தோழியிடம், "தோழியே! கரிய கொம்புகளையுடைய குறிஞ்சி மலர்களிலிருந்து தேன் பெருகும் மலைநாட்டைச் சேர்ந்த என் தலைவனுக்கும் எனக்குமான நட்பு (காதல்), இந்த நிலத்தை விடப் பெரியது; வானை விட உயர்ந்தது; கடலின் ஆழத்தை விட மிக ஆழமானது" என்று கூறித் தன் காதலின் தீவிரத்தை வெளிப்படுத்துகிறாள்.

தோழி அறத்தொடு நிற்றல்

தோழி செவிலிக்க அறத்தொடு நிற்கும் நிலை ஏழு வகைப்படும் அவையாவன எளித்தல், ஏத்தல், வேட்கை, உரைத்தல், கூறுதல், உசாவுதல், ஏதீடு, தலைப்பாடு உண்மை செப்புங்கிளவி.

தலைவி தோழியிடம் தன் காதலை நேரடியாகவோ அல்லது குறிப்பாலோ உணர்த்தும் ஏழு வழிகளைத் (தொல்.பொருள். 204) வரையறுக்கிறது:

எளித்தல்: தலைவன் எளிய குணமுடையவன், யாவர்க்கும் எளியவன் என அவன் எளிமையைக் என்று கூறிதோழி அறத்தொடு நிற்பள்.

“அன்னை அறியினும் அதிக அலர்வாய்...

மெல்லிலைப் பரப்பின் விருந்துண் டியானுமிக்

கல்லென் சிறுநெடித் தங்கின்மற் றெவனோ

எனமொழித் தனனே ஒருவன் அவற்கண்டு..... (அகம்.110)

ஏத்தல்: தலைவனுடைய வீரம், கொடை மற்றும் குலப் பெருமைகளை உயர்த்திக் கூறி அறத்தொடு நிற்பாள்.

“ஊசி போகிய சூழ்செய் மாலையன்

.....

வரிபுனை வில்லன்..... (அகம்.48)

என்று தவைனின் வீரத்தைப் போற்றிப் பேசுதலை இப்பாடலில் காணலாம்.

வேட்கையுரைத்தல்: தலைவன் மேல் தான் கொண்டுள்ள மாறாத காதல் விருப்பத்தை வெளிப்படுத்துதல்.

கூறுதல்: தன் உள்ளக் கிடக்கையை, மன வேதனையைத் தோழியிடம் விரிவாகக் கூறுதல்.

உசாதல்: செவிலித்தாய் வெறியாட்டு (வேலனை வைத்துப் பூசை) நடத்தும் போது, "இந்த நோய் முருகனால் வந்ததல்ல" என வேலனிடமே வினவுவது போல் தோழியிடம் பேசுதல்.

ஏதீடு (சான்றுகாட்டி) மூலம் அறத்தொடு நிற்றல்

தலைவி அல்லது தோழி, பெற்றோருக்குத் தலைவனின் மேல் நல்ல மதிப்பு வர வேண்டும் என்பதற்காக, தலைவன் தங்களைக் காப்பாற்றிய ஒரு வீரச் செயலை (யானையிடமிருந்தோ அல்லது ஆற்று வெள்ளத்திலிருந்தோ மீட்டதை) ஒரு சான்றாகக் கூறி அறத்தொடு நிற்பர்.

"...உருமுச் சிவந்தெறிந்த உக்கிரக் கட்கண்

பெருமாத் தகைத்த முரிமருப்பு யானை

அண்ணல் யானை அணிமுகத் தறைந்த

கைம்மிக வந்த வெம்மை நோக்கி..." (குறிஞ்சிப்.வரி.178-181)

கபிலரின் குறிஞ்சிப்பாட்டில் தோழி செவிலித்தாயிடம் கூறுகிறாள்: "நாங்கள் தினைப்புனம் காத்துக் கொண்டிருந்த போது, எங்களை நோக்கி ஒரு மதம் பிடித்த யானை உக்கிரமாக ஓடி வந்தது. அப்போது வேட்டையாட வந்த அந்த மலைநாட்டுத் தலைவன், தன் அம்பு கொண்டு அந்த யானையைத் தடுத்து எங்களைக் காப்பாற்றினான்." இதன் மூலம் தலைவனின் வீரத்தையும், அவனுக்கும் தலைவிக்குமான சந்திப்பையும் அறத்தின் வழியே வெளிப்படுத்துகிறாள்.

தலைப்பாடு: தலைவனை முதன்முதலில் சந்தித்த நிகழ்வை (உண்மைச் செப்புங் கிளவி) அப்படியே நேர்மையாகக் கூறுதல்.

தோழி செவிலித்தாயிடம் அறத்தொடு நிற்றல்

தலைவியின் மெலிந்த உடல்நிலையைக் கண்டு வருந்தும் செவிலித்தாய், இதற்குக் காரணம் முருகக் கடவுளின் கோபமோ என்று அஞ்சி வேலனை அழைத்து "வெறியாட்டு" (பூசை) நடத்தத் திட்டமிடுவாள். அப்போது தோழி குறுக்கிட்டு உண்மை நிலையைத் தாய்க்கு உணர்த்துவாள்.

"அம்ம வாழி தோழி பன்மலர்

நறுந்தண் சோலை நாட கெழ நெடுந்தகை

குன்றம் பாடான் ஆயின்

என்பயஞ் செய்யுமோ வேலற்கு அவ்வெறியே" (ஐங்கு.244)

வேலன் வெறியாடத் தொடங்கும் போது தோழி செவிலித்தாயிடம், "அன்னையே! பல மலர்கள் நிறைந்த சோலைகளையுடைய மலைநாடன் நம் தலைவியின் மனத்தைக் கவர்ந்தவன். வேலன் நடத்தும் இந்த வெறியாட்டு பூசையால் தலைவியின் காதல் நோய் எப்படித் தீரும்? (தீராது, ஆகவே இதனை நிறுத்து)" என்று மிகவும் நாசூக்காகப் பக்குவமாக உண்மையை உணர்த்துகிறாள்.

மேலும்,

“அன்னாய் வாழி வேன் டன்னை என்தோழி

..... நாடன்

மலர்ந்த மார்பிற் பாயல்

தவநனி வெய்ய நோகோ யானே” (ஐங்கு.205)

தோழி செவிலித்தாயிடம் நம் தலைவியை இத் தலைவனுக்கே கொடுக்க வேண்டும் என்று உறுதியுடன் கூறி அறத்தொடநிற்பாள்.

செவிலித்தாய் நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்

தலைவி (தலைமகள்) ஒருவனைக் காதலிக்கும் ரகசியமான களவு வாழ்க்கையை, அதனைப் பெற்ற நற்றாய்க்குப் பொறுப்புடன் எடுத்துரைத்து, அவளைத் தலைவனுடன் மணம் செய்து வைக்கும்படி முறையாக வெளிப்படுத்தும் ஒரு சங்க கால இலக்கிய மரபாகும் செவிலித்தாய் அதனைத் தலைவியைப் பெற்ற தாயான நற்றாயிடம் கொண்டு சேர்ப்பாள்.

செவிலி, நற்றாயை நோக்கி தலைவியின் மெலிவுக்கும், அவளது காதல் மலர்களுக்கும் உரிய காரணத்தைக் கூறி, தலைவனுக்கே அவளை மணம் முடிக்குமாறு நற்றாயிடம் அறத்தொடு நின்று அறிவுறுத்தும் பாடல் இது.

“மணிக் குரல் நொச்சிக் தெரியல் சூடி

பலிக் கள்ஆர் கைப்பார் முது குயவன்

.....

வன்கண் காளையை ஈன்ற தாயே” (நற். 293)

இப்பாடல்மூலம் அறிய முடிகிறது.

நற்றாய் தந்தை மற்றும் அண்ணன்மாரிடம் அறத்தொடு நிற்றல்

செவிலித்தாய் மூலம் உண்மையறிந்த பெற்ற தாய் (நற்றாய்), வீட்டில் உள்ள ஆண்களிடம் (தந்தை மற்றும் தமையன்மார்களிடம்) இக்காதலைத் தெரிவிப்பாள். ஆண்கள் முதலில் கோபமடைந்தாலும், பிறகு இதுவே முறை என ஏற்றுக்கொள்வர்.

"அவரும் தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக் கண்சேந்து

ஒருபகல் எல்லாம் உருத்தெழுந்து ஆறி

இருவர்கண் குற்றமும் இல்லையால் என்று

தெருமந்து சாய்த்தார் தலை." (கலித்.39)

நற்றாய் தலைவியின் காதலைப் பற்றிச் சொன்னதும், தந்தையும் அண்ணன்மார்களும் தங்களின் வில்லையும் அம்பையும் பார்த்து, கண்கள் சிவக்க ஒரு பகல் முழுவதும் பயங்கரக் கோபமடைந்தனர். ஆனால், சற்று நேரம் கழித்துக் கோபம் ஆறிய பின், "தலைவன் மற்றும் தலைவி இருவர் பக்கமும் எவ்வித ஒழுக்கக் குற்றமும் இல்லை; இருவரும் தூய்மையாகக் காதலித்துள்ளனர்" என்பதை உணர்ந்து, சம்மதக் குறியீடாகத் தங்கள் தலைகளைக் குனிந்து திருமணத்திற்கு உடன்பட்டனர்.

அறத்தொடு நிற்றலின் பயன்

களவைக் கற்பாக்குதல்: கள்ளத்தனமான காதலைச் சமுதாயம் போற்றும் உன்னத இல்லறமாக மாற்றுவது. பெண்ணின் நாணமும் கற்பும்: உயிரினும் சிறந்த நாணத்தை விடக் கற்பே சிறந்தது "நாணினும் செயிர்தீர்க் காட்சிக் கற்புச் சிறந்தன்று" - தொல்காப்பியம் என்ற தமிழ் நெறியின்படி பெண்ணின் ஒழுக்கத்தைக் காப்பது. குடும்ப அமைதி: பெற்றோர்களுக்குத் தீங்கோ, மனவருத்தமோ தராமல் நேர்வழியில் திருமணத்தை முடிப்பது.

இல்லறம்

இல்லறம் சார்ந்த தொல்காப்பிய நூற்பா (கற்பியல்)தொல்காப்பியர் திருமணத்திற்குப் பிந்தைய இல்லற வாழ்க்கையை 'கற்பியல்' என்னும் இயலில் விளக்குகிறார். கணவனும் மனைவியும் இணைந்து வாழும் இல்லறத்தின் தலையாய கடமைகளாக அவர் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறார்:

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்கொளற்குரி

மரபின் கிழவன் கிழத்தியைக்கொடைக்குரி

மரபினோர் கொடுப்பக் கொள் வதே." (தொல். பொருள். கற்பியல்.1)

உரிய முறைப்படி, பெற்றோர் அல்லது சான்றோர்கள் முன்னின்று சடங்குகளுடன் (கரணமொடு) மணமகளை மணமகனுக்குக் கொடுப்பதே 'கற்பு' எனப்படும் முறையான இல்லறத்தின் தொடக்கம் ஆகும்.மேலும், இல்லறத்தாரின் கடமைகளாகப் பின்வரும் நூற்பா அமைகிறது:

"கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்மெல்லியற்

பொறையும் நிறையும் வல்லிதின்விருந்து

புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்..." (தொல். பொருள். கற்பியல்.11)

இல்லறத்தில் வாழும் தம்பதியர் தூய்மையான அன்பு, பொறுமை, விருந்தினர்களை உபசரித்தல் (விருந்து புறந்தருதல்) மற்றும் தன் சுற்றத்தார்களைப் பேணிக் காத்தல் (சுற்றம் ஓம்பலும்) ஆகியவற்றை முதன்மைக் கடமைகளாகச் செய்ய வேண்டும்.

தொல்காப்பியர் குறிப்பிட்ட இல்லறக் கடமைகளுக்கு (விருந்தோம்பல், சுற்றம் ஓம்பல், வறுமையிலும் செம்மை) சான்றாக அமையும் சங்க இலக்கியப் பாடல்கள்:

விருந்தோம்பல்

தலைவி இல்லறத்தில் விருந்தினரை எப்படிக் கவனித்தாள் என்பதைத் தோழி தலைவனிடம் கூறும் பாடல்:

"அள்ளல் இளமணன் உள்இறந்து உதித்த

வள்இதழ் நெய்தல் கூம்புவிடிந் தன்ன...

...வைகுபுல விடியல் மைபுலம் பலைப்ப

நெய்கண் உடைந்த வழுவழுத் தன்ன

பாசடகு இட்ட நெய்க்கண் வெண்சோறு

சேய்நின்று வரூஉம் விருந்திற்கு ஏந்தும்

மாண்நலம் தகைந்த நெஞ்சமொடு

யானும் தையலும் நோகோ யானே." (நற்.120)

விடியற்காலையில் பசுமையான கீரையும், நெய் உருகி மிதக்கும் வெண்சோற்றையும் சமைத்து, தூர தேசத்திலிருந்து பசியோடு வரும் விருந்தினருக்கு இன்முகத்தோடு அள்ளித் தரும் மாண்புடையவள் இல்லத்தரசி.

வறுமையிலும் இல்லற மாண்பு

இல்லறத்தில் வறுமை வந்தபோதும், பிறரிடம் கையேந்தாமல் விருந்து உபசரித்த தலைவியின் நிலையை விளக்கும் பாடல்:

"முளைவளர் முன்றில் இலைஇல் கள்ளிப்

பொறைதவிர் பாங்கின் பறைக்கண் ஏய்ப்ப...

...மாரிப் பித்திகத்து ஈரிதழ் அலரி

நிரைஇதழ் உண்கண் மாதராள்

தான்அட்ட தண்புளிப் பாகு." (நற்.44)

வீட்டில் தானியம் இல்லாத வறுமை நிலை. ஆனாலும், தன் காதில் உள்ள தங்கக் குழையை விற்று, உணவுப் பொருட்களை வாங்கி, இன்முகத்தோடு சமைத்து விருந்தினருக்குத் தலைவி உணவளித்தாள்.

கணவனின் அன்பைப் போற்றுதல்

தலைவி முதன்முதலாகச் சமைத்த தயிர்க் குழம்பைத் தலைவன் பாராட்டி உண்பதை விளக்கும் அழகிய இல்லறப் பாடல்:

"முளிதயிர் பிசைந்த சோறமை பிண்டம்

முள்எயிற்று ஏர்அமை மகளிர் வெள்வளைப் பாணி...

...தான்அட்டு உற்ற கைகவர் இன்புளி

'இனிது' எனக் கணவன் உண்டலின்

நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே." (குறுந்.167)

முளிந்த தயிரைத் தன் விரல்களால் பிசைந்து சமைத்த புளிக் குழம்பைத் தலைவன் 'மிகவும் இனிமையாக இருக்கிறது' என்று பாராட்டி உண்கிறான். அதைக் கேட்டுத் தலைவியின் முகம் மகிழ்ச்சியால் மலர்கிறது. இதுவே சிறந்த இல்லற இன்பம்.

முடிவுரை

அகத்திணை ஒழுக்கத்தில் தலைமக்களின் காதல் வாழ்க்கையில் பங்கு கொண்டு தலைவிக்கு அரணாக நின்று தலைவியைக் காப்பவளாக தோழி விளங்குவதை இதன்வழி அறிய முடிகிறது. மேலும், களவானது அகத்திணை ஒழுக்கத்தில் இன்றியமையாத இடத்தைப்பெறுகின்றன நிலையினையும் அதேபோன்று புறத்திணையிலும் களவு சார்ந்த ஒழுக்க நிலைகள் கூறப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது. தோழி தலைவியின் வாழ்க்கையைத் தன் வாழ்க்கையாக கருவது மட்டுமல்லாது, தலைவனைத் திருமணம் செய்து இல்லற வாழ்க்கைக்கு வழிகாட்டி வற்புறுத்தும்

சூழலையும் தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் படம்பிடித்துக் காட்டுவதனை இதன்வழி புலப்படுகின்றது. அதுமட்டுமின்றி மதில் மணம் செய்து கொள்வதற்கு முன்னமே, தலைவி கற்பை உயிரெனப் போற்றுவாள் என்பதும், உடன்போக்கு நிகழ்ந்தவிடத்து அறத்தொடுநிற்றலுக்குரிய தோழி, செவிலித்தாய், நற்றாய், மூவரும் முறையே அறத்தொடு நிற்பர் என்பதையும் அறிய முடிகிறது. மேலும், அறத்தொடு நிற்றல் என்பது மிக சிறந்த பண்பாட்டு நிலையாக கருதப்படுகின்றது.

References

Balasubramaniyam, K.U. (2011) Natrinai Moolamum Uraiyum, New Century Book House, Chennai

Ilampuranar (2008) Tholkapiyam Porulathikaram, Saradha Pathipagam, Chennai.

Jeyabal, R. (2011) Agananuru Moolamum Uraiyum, New Century Book House, Chennai

Kandasamy (2021) Purathinai Valviyal, Tamil University Thanjavur,

Subbu Reddiyar, N. Tholkapiiyam Kattum Valkai, Pari Nilayam, Chennai

Swa Swaminatha Iyer, U.Ve (1986) Pathupattu Moolamum Nachinarkiniyar Uraiyum, U.Ve.Sa Noolagam, Chennai

Swaminatha Iyer, U.Ve (1971) Purananuru Moolamum Uraiyum, Kabir Achukoodam, Chennai

Swaminatha Iyer, U.Ve (1980) Pathirtupathu Moolamum Palaya Uraiyum, U.Ve.Sa Noolagam, Chennai

Swaminatha Iyer, U.Ve (2000) Kurunthogai Moolamum Palaya Uraiyum, U.Ve.Sa Noolagam, Chennai

Viswanathan, A. (2011) Kalithogai, New Century Book House, Chennai

Funding: No funding was received for conducting this study.

Conflict of Interest: The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License